களத்தூர் ஏரிக்கு வரும் கால்வாயைச் சீரமைத்தல்.

69—(*வினா எண் 98) திரு. வீ. தமிழ்மணி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு பாலாற்றில் இருந்து களத்தூர் ஏரிக்கு வரும் கால்வாயை சீரமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது தொடங்கப்படும்?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, (அ) ஆம் (ஆ) திட்டம் தலைமைப் பொறியாளரின் (பாசனம்) ஆய்வில் உள்ளது. அறிக்கை பெறப்பட்டவுடன் பரிசீலிக்கப் பட்டு முடிவு எடுக்கப்படும்.

திரு வீ. தமிழ்மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திட்டம் ஆய்வில் உள்ளது என்று அமைச்சர் அவர்கள் அறிவித்ததற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த 25 ஆண்டுகளாக அந்த ஏரிக்கு தண்ணீர் வருகிற கால்வாயை சீரமைக்காத காரணத்தால் மூன்று போகம் விளையக்கூடிய களத்தூர் பகுதி—சுமார் 2 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பு—ஒரு போக சாகுபடிக்கு கூட வசதி இல்லாத காரணத்தால் கடந்த 25 ஆண்டுகளாக அந்தப் பகுதியிலே இருக்கிற மக்கள் வேலை இல்லாத் திண்டாட்டத்தில் அல்லல்பட்டுக் கொண்டிருக்கிறார் கள். அதைப் போக்குகின்ற முறையில் பசுமைப் புரட்சிக்கு ஊக்குவிக்கின்ற இந்த அரசு உடனடியாக அந்தக் கால்வாயை சீரமைக்க ஏற்பாடு செய்யுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, அந்தக் களத்தூர் ஏரிக்கு பாலாற்றிலிருந்து தண்ணீர் வருவதில்லை. அதைக் கொண்டு வரலாமா என்று தான் அரசு ஆலோசனை செய்து கொண்டிருக்கிறது. மீஞ்சல் மடு அணையிலிருந்துதான் அந்த ஏரிக்கு தண்ணீர் வருகிறது. 1987 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பொழிந்த மழையில் அந்த அணை பாதிக்கப் பட்டது மட்டுமல்லாமல் அந்த எரிக்கு வருகிற வரத்துக் கால் வாயும் தூர்ந்து போய்விட்டது. எனவே ஏரிக்கு தண்ணீர் கிட்டுவது இல்லை. எனவே தான் ஏரிக்கு மீஞ்சல் மடு அணையிலிருந்து தண்ணீர் கொண்டு வரும் பொருட்டு அணையை சீரமைக்கவும் கால்வாயின் தலை மடுவை சீரமைக்கவும் அரசு உத்தேசித்து இருக்கிறது.

1989 ஏப்ரல் 20]

திரு வீ. தமிழ்மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால அரசு ஏற்கெனவே இரண்டு முறை அந்த மீஞ்சல்மடுவில் அணை கட்டப்பட்டு அது உடைந்து போய் விட்டதாக அறிகிறேன். அதற்காக எவ்வளவு ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது? இப்போது எப்படி வெள்ளம் வந்தாலும் உடையாத அளவுக்கு ஒரு நிரந்தரமான தடுப்பு அணையைக் கட்டி அந்தக் கால்வாயை சீர் செய்து களத்தூர் ஏரிக்கு மட்டும் அல்லாமல் அந்தக் கால்வாயின் அருகாமையில் அமைந்திருக்கிற மேலும் 7 ஏரிகளுக்கும் அந்தக் கால்வாயினால் நீர் வரத்து ஏற்படுகிறது. எனவே இந்தத் திட்டத்தை உடனடியாக செயல்படுத்தினால் சுமார் 5 ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட நிலம் 3 போக சாகுபடிக்கு ஏற்றதாக அமையும். எனவே அந்தத் திட்டத்தை நிரந்தரமாக ஒரு தீர்வு காணுகிற அடிப்படையில் செயல்படுத்த முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, மீஞ்சல் மடு அணையும் அதனுடைய வரத்துக் கால்வாயும் சீரமைக்கிற போது உறுப்பினர் அவர்களுடைய யோசனை கருத்தில் கொள்ளப்படும்.

திரு. வ. முல்லைவேந்தன் : தலைவர் அவர்களே, பொதுப் பணித்துறையின் மூலம் கால்வாய்களை வெட்டுவதற்கும் ஏரிகள் வெட்டுவதற்கும் அணைகள் கட்டுவதற்கும் விவசாயிகளுடைய நிலத்தை கையகப்படுத்துகிற நேரத்தில் நிலத்தை இழந்திருக்கிற அந்த விவசாயிகளுக்கு வேலை வாய்ப்பில் முன் உரிமை தரப்படுமா என்பதையும் இதற்கு முன்னால் அப்படி தரப்பட்டிருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, நல்ல யோசனை, அதை அரசு தன் கவனத்தில் கொள்ளும்.

(முற்பகல் 9.30)

திரு. எல். மூக்கையா ; தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் ஏரிகளுக்குச் செல்லுகின்ற கால்வாய்கள் சரிவர இல்லாததால் தான் மழைக் காலங்களில் அந்தக் கால்வாய் வழியாகத் தண்ணீர் சென்று ஏரி நிரம்பாமல் போய் விடுகின்ற காரணத்தினால் வறட்சி ஏற்படுகிறது. ஆகவே, இதைக் கருத்தில் கொண்டு ஏரிக்குச் செல்லுகின்ற கால்வாய்கள் அனைத்தையும் சீர்படுத்த வேண்டும் என்ற திட்டம் அரசிடம் ஏதேனும் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் ; தலைவர் அவர்களே, அதைத்தான் நேற்றே நான் தெரிவித்தேன். அப்படி வரத்துக் கால்வாய்களை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த ஆக்கிரமிப்பு அகற்றப்படும்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : தலைவர் அவர்களே, பாலாற்றிலிருந்து பல ஏரிகளுக்கு இதே போன்று ஸ்பிரிங் சேனல் மூலமாக தண்ணீர் செல்லுகிறது. அவைகள் எல்லாம் காலப் போக்கிலே அழிந்து கொண்டிருக்கின்ற சூழ்நிலை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட ஸ்பிரிங் சேனல்களை மீண்டும் புதுப்பிப்பதற்கு அரசிடம் ஏதாவது திட்டம் இருக்கிறதா? அது மட்டுமல்ல, பாலாற்றிலிருந்து மணல் அதிகமாக எடுப்பதன் காரணமாக இந்த நீர் ஊற்றானது பாதிக்கப்படுகின்ற நிலைமை இருக்கிறது. அதைத் தடை செய்கின்ற திட்டம் ஏதாவது அரசிடம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

(பதில் இல்லை)

திரு. காதர் பாட்சா என்கிற வெள்ளைச்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, வரத்துக் கால்வாயை மராமத்து செய்யக் கூடாது என்ற விதி ஏற்கனவே இருக்கிறது. ஒவ்வொரு ஃபீடிங் சேனலும் மராமத்து செய்யப்படாத காரணத்தினாலே எந்த ஏரிக்கும் தண்ணீர் வரத்து தடைபட்டிருக்கிறது. ஆகவே, அனைத்து நீர்ப்பாசன குளங்களுக்கும் வரத்துக் கால்வாயை மராமத்து செய்கின்ற திட்டத்தை அரசு அமல்படுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, அது இந்த வறட்சி நிவாரணத்திலே எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. எஸ். ஆர். முனிரத்தினம் : தலைவர் அவர்களே, திருவள்ளூர் தொகுதியில் உள்ளடங்கிய பூண்டி ஒன்றியத்தில் கடந்த கழக ஆட்சிக் காலத்தில்..... (மணியடிக்கப்பெற்றது.)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

புல்லூரில் நீர்த்தேக்கம்.

70—(*வினா எண் 499) திரு. ஆர். மகேந்திரன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நாட்ராம்பள்ளி தொகுதி, புல்லூரில் நீர்த் தேக்கம் கட்டும் திட்டம் எப்பொழுது செயற்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டம் வாணியம்பாடி வட்டம் புல்லூர் கிராமத்திற்கருகே பாலாற்றின் குறுக்கே நீர்ப்பரப்பு நீர்த் தேக்கம்